Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **SC.90/2020** |
| Sessions | .. .. | } | |
| | } | Prosecution – **PW8** | |
| Deposition of witness for | } | Defence – | |
| | } | Court – | |

Name : பாண்டியராஜ்

Father/Husband Name : அய்யாகண்ணு

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.2024.

<u>(எதிரி ஆஜர்.)</u>

முதன்மை விசாரணை–

நான் தற்போது திருப்பூரில் வசித்து வருகிறேன். நான் டெய்லர் வேலை பார்க்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன ராஜாவை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 19.08.2019 அன்று காலை 10.30 மணியளவில் என் தம்பி ராஜாவை இராமநாதபுரம் ஜெகன் தியேட்டர் அருகில் கத்தியால் குத்தியதாக அன்று காலை சுமார் 11.30 மணிக்கு எனக்கு போன் வந்தது. நான் உடனே கிளம்பி மதுரை இராஜாஜி மருத்துவமனைக்கு போனேன். அங்கு என் தம்பியை பார்க்க என்னை

உள்ளே விடவில்லை. என் தம்பியுடன் என் அம்மா மீனாட்சி, என் தங்கை உமா, தம்பி பசங்க இருந்தார்கள். அங்கு மருத்துவமனையில் மருதமுத்து என்பவரும் இருந்தார். கேணிக்கரை காவல் ஆய்வாளர் அன்று மாலை 05.00 மணிக்கு வந்து சம்பவத்தின்போது என் தம்பி ராஜா அணிந்து இருந்த இரத்தம்படிந்த சட்டையை என் தங்கை உமா கழற்றி காவல் ஆய்வாளரிடம் கொடுத்தார். அந்த சட்டை இரண்டாக கிழிந்து இருந்தது. அந்த சட்டை நீல நிறத்துடன் இருந்தது. என்னிடம் காட்டப்படுவது அந்த சட்டைதான். (சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள கிழிந்த சட்டையை பார்த்து சாட்சி சாட்சியம் சொன்னார்) அந்த சட்டையை காவல் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றிக்கொண்டார். அந்த அத்தாட்சியில் நானும், மருதமுத்துவும் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் மேலே இருப்பது என் கையெழுத்து, கீழே இருப்பது மருதமுத்துவின் கையெழுத்து. கைப்பற்றுதல் மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் **அ.சா.ஆ.6/அ.சா.8**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

காவல் ஆய்வாளர் வந்தபோது மாலை சுமார் 05.30 மணி இருக்கும். நான் சம்பவ சமயத்தில் திருப்பூரில் இருந்தேன். எனக்கு தகவல் கிடைத்தபோது காலை சுமார் 11.30 மணிஇருக்கும். நான் கம்பெனியில் விடுப்பு எடுத்துவிட்டுதான் மதுரைக்கு வந்தேன். எனக்கு தகவல் கிடைத்தபோதே இராமநாதபுரத்தில் பார்க்கமுடியவில்லை, மதுரைக்கு கொண்டுவந்துவிட்டார்கள் என்று தகவல் சொன்னார்கள். நான் கையெழுத்துபோட்ட ஆவணத்தை காவல் ஆய்வாளர் எழுதினார், அதில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றும், என் முன்னிலையில் பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும், போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டுவிட்டு தற்போது போலிசார் சொல்லிக்கொடுத்தன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை:- இல்லை.